**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** ஏற்கனவே சொன்ன படி தக்காளிப் பழ ரசத்தை டின்னில் அடைத்தால் விற்பனை ஆவது இல்லை. ஆகையால்தான் அன்னுசிப் பழத்தைப் பதனிட்டு டின்னில் அடைக்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேம். இது வெளி நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தக்காளிப் பழ ரசத் தைத் தயாரிக்க முயற்சி செய்வதில் லாபம் இல்லை.

**திரு: ஆர். பொன்னப்ப நாடார் :** அமைச்சர் அவர்கள் கூறிய படி கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிற கல்குளம் விளவங்கோடு கூட்டுறவுச் சங்கத் தலைவர் உடனடியாக இந்த வேலையைத் துவங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர் :** இந்த கற்குளம்—விளவங்கோடு கூட்டுறவு சங்கத் தலைவர் ,எதிர்கட்சித் தலைவருக்கு மிகவும் நெருக்கமாக உள்ளவர். நான் பணத்தை அனுப்ப வேண்டியவன். ரூ. 2 லட்சம் சாங்ஷன் செய்து அனுப்பியிருக்கிறேன். ஆணையிடுகின்ற சக்தி எனக்கில்லை. எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுக்கு மதிப்பு இருக்கும். ஆகவே அவர் சொல்லி இந்தத் தொழிற் சாலையை ஆரம்பிக்கச் செய்தால் பல பேர்களுக்கு வேலை கிடைக்கவும் நல்ல வாய்ப்பாக இருக்கும்.

**திரு. பெ. மலைச்சாமி :** கூட்டுறவுத்துறை பல பொருள்களை உற்பத்தி செய்து வருகிறது. ஆகஸ்டு 30-ம் தேதியில் இருந்து மது பானங்களையும் தயாரிக்க கூட்டுறவுத்துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** மதுபானங்களைக் கூட்டுறவுத் துறையில் மகாராஷ்டிர மாநிலத்தில் தயாரித்து வருகிறார்கள். டில்லி போயிருந்தபோதுகூட நான் சொன்னேன், மது பானங்களைத்தவிர, தமிழகம் மற்றப் பொருள்களைக் கூட்டுறவுத் துறையில் தயாரித்து வருவதில் முன் நிற்கும் என்று. மதுபானங்களையும் மகாராஷ்டிரம் தயாரிப்பதற்கு என் பாராட்டு, மதுபானங்களைத்தவிர மற்றவற்றைத் தயாரிப்பதில் தமிழக கூட்டுறவுத்துறை என்றைக்கும் முன்னணியில் நிற்க முயற்சிக்கும், என்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள் 26, 27 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

*Employees' State Insurance Scheme*

* 28 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the supply of medicines to an employee (and his family) covered by the Employees' State Insurance Scheme is limited to a sum of Rs. 50 per annum; and

(*b*) if so, whether this Government would take up the matter with the Central Government for enhancement of this amount?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) & (இ) புது டெல்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு அனுமதிக்கத்தக்க மருத்துவ உதவிகளின் உச்ச வரம்பு ரூ. 50 ஆக இருக்க வேண்டும் என்று முதலில் முடிவு செய்தது. அரசின் பிரதிநிதிக்குழு ஒன்று முன்னுல் தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் மத்திய அரசிடம் கோரிக்கை மனு ஒன்றைச் சமர்ப்பித்ததன் விளைவாக, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட மருத்துவ உதவியின் உச்ச வரம்பை மாற்றி, வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிக்கு தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 எனவும், விரிவாக்கப்பட்ட வசதிக்கு ரூ. 54 எனவும், முழு மருத்துவ வசதிக்கு (படுக்கை வசதிகள் உட்பட) ரூ. 64 எனவும் தற்போது முடிவு செய்துள்ளது.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that the increase in the amount spent for a worker is not considerable and it is only marginal, will this Government come forward to examine the whole matter *de novo* and see that at least hereafter the maximum amount that is spent would be at least two times the amount that each worker contributes, namely, Rs. 5 or 10? Even if the Central Government cannot foot this bill, will the State Government come forward to foot it at least partially and see that the workers are satisfied?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசு இப்போது தந்துவரும் உதவியோடுகூட மாநில அரசு 1¼ கோடி ரூபாய் அளவிலே அதிகமாகச் செலவழித்திருக்கிறது. இப்போதுள்ள முறையை மாற்றி, எவ்வளவு செலவாகிறதோ அதை ஈட்டுறுதிக் கழகமே தரவேண்டுமென்று வற்புறுத்தலை தமிழக அரசு டெல்லிக்குத் தெரிவித்திருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, கோவையிலுள்ள மருத்துவமனையில் 300 படுக்கைகள் என்று தொடங்கி, இப்போது 200 படுக்கைகள் என்ற அளவிலே வந்து நிற்கிறது. அதை மீண்டும் 300 படுக்கைகளாக உயர்த்த அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால், விரிவாகப் பதில் சொல்லப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் மதுரை, கோவை போன்ற இடங்களில் துவக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு 50 ரூபாய் என்று ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் உதவி அளிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். மாநில அரசு அதிகமாகச் செலவழித்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அப்படியானுல் அந்தத் தொழிலாளர்களின் வியாதி சொஸ்தமாகும் வரையில் செலவழிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு தந்து வரும் உதவி அந்த அளவிலே தான் இருக்கிறது. மத்திய அரசு தேவையான உதவி அளிக்கா விட்டாலும், அதற்காகத தொழிலாளர்களுடைய உடல் நலனைப் பாதுகாப்பதில் தமிழக அரசு தயங்காது. இப்பொழுதே அதிக அளவில் தமிழக அரசு செலவழித்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு முன்பு மருத்துவத் துறை நெறியாளரிடமிருந்து ஒரு சுற்றறிக்கை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்தது. அதில், ஏராளமான திட்டங்கள் செய்யப்படப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. அவற்றை யெல்லாம் விரைவிலே நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் கவனித்துப் பரிசிலனை செய்யும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நலன் மிகவும் அவசரமானது என்கிற காரணத்தாலே, அந்த எண்ணத்தை மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல நேரடியாக மந்திரியவர்களே காவடி தூக்குவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வியை மாற்றிக் கேளுங்கள். The question is not allowed 'காவடி தூக்கு வார்களா?' என்று கேள்வி கேட்பது முறையாகாது. இந்தக் கேள்வியை நான் அனுமதிக்க மறுக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is not unparliamentary.

MR. SPEAKER: It is not in good taste.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, பல இடங்களில் படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளை ஏற்படுத்துவதில் தயக்கம் காட்டப்படுகிறது. மேட்டூரில் ஒரு மருத்துவ மனை கட்டுவதற்காக ஒரு இடம் சர்வே நடத்தப்பட்டது. ஆனால் இன்னும் மருத்துவ மனை நடத்த வழி பிறக்கவில்லை. இது குறித்து அரசு ஆவன செய்யுமா

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அக்கறைதான் அரசுக்கும் இருக்கிறது. அவைகளுக்கெல்லாம் நிதி தேவைப் படுகிறது. அதற்கான நிதி ஈட்டுறுதிக் கழகத்திலிருந்து வர வேண்டும். முன்பிருந்த அரசினர் காவடி தூக்கிக் கொண்டிருந்த மனப்பான்மையில் இருந்தவர்கள். இப்பொழுது உள்ள தமிழக அரசு இந்தக் கோரிக்கைக்கு உதவியளிக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்கும் மனப்பான்மை கொண்டது என்பதை ஏற்கனவே டெல்லிக்குக் காவடி தூக்கிப் பழக்கப்பட்ட கட்சியினரும் உணர வேண்டும்.

1971 ஜூன் 23]

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, கோவை போன்ற இடங்களில் இருக்கிற ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிகளில் ஸ்பெஷலிஸ்டுகள் இல்லாத காரணத்தால், தொழிலாளர்கள் மதுரை, வேலூர் போன்ற பகுதிகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது சிரமமாக இருக்கிற காரணத்தால், அரசாங்கம் அந்த ஆஸ்பத்திரிகளிலேயே ஸ்பெஷலிஸ்ட்டுகளை நியமித்துத் தொழிலாளர்களுக்கு உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதிலே இந்த அரசு முழு கவனமும், அக்கறையும் செலுத்தி வருகிறது. ஆனால், அதற்குப் போதிய நிதி வசதி இல்லை. அப்படி நிதி வசதி இல்லாமல் இருந்தும் தமிழக அரசு 1¼ கோடி ரூபாய் அளவிலே அதிகமாகச் செலவழித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த வசதிகளை யெல்லாம் செய்வதற்கு அரசுக்கு மிகுந்த அக்கறை இருந்து வருவதைத் தொழிலாளர்களே உணருவார்கள். எனவே வசதி ஏற்படும்பொழுது அவைகள் எல்லாம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, was are happy that the Hon. Minister has announced a slight increase in the amount to be granted for each employee. In spite of the fact that the Government spend a lot of money on the scheme, it is not giving that amount of satisfaction as it ought to give and unnecessarily they get a bad name. So, will the Government examine the question of appointing specialists in hospitals like the one in Aynavaram so that cases requiring specialised treatment need not be referred to the General Hospital, as is being done now? Also, will the Government take preventive measures like periodical medical check-up and proper nutrition as is being done in the Western countries and see that the workers get a fair deal?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துப்படி, ஒரு பதினைந்து தினங்களுக்கு முன்னாலே தொழிலாளர் தலைவர்களையும், தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளையும் அழைத்துப் பேசி, இதுபோன்ற பிரச்சினைகளைப்பற்றி விவாதித்திருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அரசு யோசனை செய்து வருகிறது. இப்போதுகூட ஸ்பெஷலிஸ்ட்டுகள் எங்கெங்கு தேவைப்படுகிறார்களோ அங்கெல்லாம் அமர்த்த அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். ஆனால், முழு அளவில் செய்துதர இயலாத நிலையில் நிதி வசதி உள்ளது.

**திரு. மா. வே. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் மூலமாக மருத்துவச் செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மாநில அரசு

ஏற்கெனவே அதிகமாகச் செலவழித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் முதலாளிகள் தரும் பங்கின் அளவை அதிகரிக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துப்படி சென்ற கூட்டத்தில் தொழில் நிறுவனத்தார்கள் பங்கை அதிகமாகத் தர வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

* 29 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) திருப்பூர் நகரில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நடமாடும் மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ & இ) திருப்பூர் நகரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நடமாடும் மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) திருப்பூர் நகரத்திற்கு ஐந்து மைல், ஏழு மைல் தொலைவிலிருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். காலையில் வேலைக்கு வருபவர்கள் இரவு 7 மணிக்கு வீடு திரும்ப வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தத் தொழிலாளர்களின் நன்மையை உத்தேசித்து, அவர்களுக்காக ஒரு மருத்துவ வேன் அமைக்கும் திட்டம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படி அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போது திருப்பூர் மருந்தகம் ஒன்றும், மற்றொரு மருந்தகமும் இருக்கிறது. ஒன்றில் 4,359 தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும், மற்றொன்றில் 3,488 தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பயனடைந்து வருகிறார்கள். தொழிலாளர்கள் நிறைந்த பகுதியிலே இந்த உதவி விஸ்தரிக்கப்பட வேண்டுமென்ற கருத்து நினைவிற்கொண்டு ஆவன செய்யப்படும்.

மு.ப. 9-30

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல் பல்லடம் இலட்சுமி மில்லில் இருக்கிறது. ஆனால் இலட்சுமி நாராயணா மில்லில் நிறைய தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அந்த ஹாஸ்பிடலில் இருக்கும் மில்லுக்குச் செல்ல 6 மைல் ஆகிறது. வேலை விட்டு 4 மணிக்குமேல் மாலையில் போக பஸ் வசதியும் இல்லை. எனவே அந்தப் பகுதியில் உள்ள மில்லுக்கு மொபைல் டிஸ்பென்சரியை, நடமாடும் ஆஸ்பத்திரியை அனுப்பி சிகிச்சை அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.